# மக்கள் ஆய்வு

## People Studies

*Multi-Disciplinary Research Institute*

*சார்பாக*

**பேரா. டாக்டர் ச. ராஜநாயகம் & குழு**

*வழங்கும்*

# பிரச்சாரத்தின் உச்சத்தில்
# ராதாகிருஷ்ணன் நகர் இடைத்தேர்தல் களம்:

## தேர்தல் கணிப்பியல் ஆய்வு முடிவுகள்

| *கள ஆய்வு நடந்த நாள்கள்:* |
| --- |
| **2017 டிசம்பர் 13-17** |

*ஊடகவியலார் சந்திப்பு:*

**18 டிசம்பர் 2017, 12.00 மணி**

*இடம்:*

சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002


*தொடர்புக்கு:*

**மக்கள் ஆய்வு** (People Studies)
122 வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை 600 094
**கிராமிய மக்கள் ஆய்வு & பயிற்சி மையம்**
பளியன்குடி விலக்கு, மேலக்கூடலூர் கிராமம், லோயர் கேம்ப், தேனி மாவட்டம்
செல்: **9003182864** (தலைமை அலுவலகம்) / **7299028443** (களப் பணியகம்)
மின்னஞ்சல்: peoplestudies@gmail.com


---

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே"

# பிரச்சாரத்தின் உச்சத்தில்
# ராதாகிருஷ்ணன் நகர் இடைத்தேர்தல் களம்:

## தேர்தல் கணிப்பியல் ஆய்வு முடிவுகள்

### ஆய்வுப் பின்னணி

“மக்களை ஆய்வது மக்களுக்காகவே” என்ற இலட்சியத்தோடு, களம்சார் ஆய்வுகளில், சிறப்பாகத் தேர்தல் கணிப்பியல் (**psephology**) ஆய்வுகளில் தனித்துவ முத்திரையோடு, பேரா. டாக்டர் ச. ராஜநாயகத்தின் வழிநடத்துதலில் கடந்த 2000-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருவது **“மக்கள் ஆய்வு” (People Studies)**.

ராதாகிருஷ்ணன் நகர் இடைத்தேர்தலின் அரசியல் முக்கியத்துவம் கருதி ஏப்ரல் 01 முதல் 09 வரை சமூக வரைவியல் நோக்கில் கணிப்பியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது தள்ளிவைக்கப்பட்ட தேர்தல், மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், முதற்சுற்று ஆய்வு டிசம்பர் 5 முதல் 12 வரை நடத்தப்பட்டது. மொத்தம் 27 பேர் கொண்ட ஆய்வுக்குழுவினர், 156 இடங்களில் 3120 வாக்காளர்களைச் சந்தித்தனர். ஆய்வு முடிவுகள் டிசம்பர் 13 அன்று நடந்த ஊடகவியலார் சந்திப்பில் வெளியிடப்பட்டன. தொடர்ந்து இரண்டாம் சுற்றில், அதே ஆய்வுக் குழுவினர் டிசம்பர் 13 முதல் 17 முடிய, 152 இடங்களில் 3040 பேரைச் சந்தித்தனர். பேரா. ராஜநாயகத்தின் *சமூக-உளவியல் அணுகுமுறையைப்* பின்பற்றி, பண்பியல் (qualitative) மற்றும் எண்ணியல் (quantitative) தரவுகளை ஒருங்கிணைத்து (triangulation) இறுதிமுடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

### பங்கேற்றோர் பின்னணி

ஆண்களைவிடச் சிறிது அதிகமாகப் பெண்கள் இந்த ஆய்வில் பங்கேற்றுள்ளனர் (பெண்கள் - 55, ஆண்கள் - 45). *வயதுரீதியாக,* 36-45 வயதினர் அதிகமாக இடம்பெற்றுள்ளனர் (42.7). அடுத்தடுத்த இடங்களில் 46-60 வயது - 21.5 / 26-35 வயது - 20.5 / வயது 25 வரை - 9.0 / வயது 60-க்கு மேல் - 6.3. *கல்விரீதியாக*, வகுப்பு 6-12 படித்தவர்கள் மிக அதிக அளவில் (42.2) பங்கேற்றுள்ளனர். அதற்கடுத்த அளவுகளில், படிக்காதவர்கள் மற்றும் ஆரம்பக் கல்விவரை படித்தவர்கள் - 37.8, கல்லூரி அல்லது தொழிற்கல்வி - 20.0. *தொழில்ரீதியாக,* கூலி வேலை மற்றும் மீன்பிடித் தொழில் செய்வோர் - 17.7, சொந்தத் தொழில் செய்வோர் - 17.6, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் - 17.1, அரசு ஊழியர் - 3.1, இல்லத்தரசிகள் - 31.7, மாணவர்கள் - 7.2, வேலையில்லாதோர் - 2.6, ஓய்வுபெற்றோர் - 3.1. *சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 26.4, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 37.6, பிற்படுத்தப்பட்டோர் - 28.4 (மீதி - பிற (உயர்) சாதியினர் / தகவல்தர விரும்பாதோர்). *மதரீதியாக,* இந்துக்கள் - 89.5, கிறிஸ்தவர் - 6.4, இஸ்லாமியர் - 2.6 (மீதி - பிற மதத்தினர் / பதில் தெரிவிக்காதோர்).

### ஆய்வு முடிவுகள்

***(1) சின்ன அரசியல் - ஓர் ஒப்பீடு:***

*முதல் சுற்று* (டிசம்பர் 5-12) ஆய்வோடு ஒப்பிடுகையில், தேர்தல் களத்தில் பிரச்சாரங்களின் வீச்சுக்கும் வீரியத்துக்கும் ஏற்ப வேட்பாளரையும் சின்னத்தையும் சரியாகப் பொருத்துவதில் நிறைய மாற்றங்களை இந்த *இரண்டாம் சுற்றில்* (டிசம்பர் 13-17) காண முடிகிறது.

| | சுற்று 2 (டிச. 13-17) | சுற்று 1 (டிச. 5-12) |
|---|---|---|
| பிரஷர் குக்கர் - டிடிவி. தினகரன் | **97.4** | 91.6 |
| இரட்டை இலை - மதுசூதனன் | **95.4** | 81.1 |
| உதய சூரியன் - மருது கணேஷ் | **94.6** | 77.8 |
| மெழுகுவர்த்திகள் - கலைக்கோட்டுதயம் | **16.5** | 14.2 |
| தாமரை - கரு. நாகராஜன் | **11.5** | 10.4 |

மதுசூதனன், மருதுகணேஷ் மற்றும் டிடிவி. தினகரன் தரப்பினருடைய பிரச்சாரம் தொகுதி மக்களைத் திணறடிக்கும் அளவு போட்டிபோட்டுக்கொண்டு வேகமெடுத்துள்ள நிலையில், செய்தி ஊடகங்களில் அவர்களுக்குத் தரப்படும் முக்கியத்துவமும் சேர்ந்து கொண்டதால், சின்னத்தோடு இணைத்துப் பார்ப்பதில் இம் மூவருக்கிடையே இருந்த வேறுபாடுகள் ஏறத்தாழச் சமன் செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

*(2) வேட்பாளர் குறித்த மதிப்பீடு:*

முதல் சுற்றில் வேட்பாளர்களைத் திறனாய்வு செய்து வாக்காளர்கள் வழங்கிய மதிப்பெண்கள், கடந்த சில நாள்களாக நடைபெறும் தீவிரப் பிரச்சாரத்தின் தாக்கத்தால் கணிசமான மாறுதலுக்கு ஆளாகியுள்ளன.

| | அறிவாற்றல் | துணிச்சல் | நிர்வாகத் திறன் | துடிப்பான செயல்பாடு | ஊடகச் சந்திப்பு | வெகுஜன உறவு | சமூக அக்கறை |
|---|---|---|---|---|---|---|---|
| *டிடிவி தினகரன்* | **81** (72) | **95** (89) | **86** (80) | **89** (85) | **94** (87) | **82** (75) | **80** (70) |
| *மருது கணேஷ்* | **66** (68) | **70** (65) | **62** (61) | **69** (75) | **72** (70) | **74** (72) | **69** (64) |
| *மதுசூதனன்* | **63** (61) | **41** (42) | **72** (70) | **57** (68) | **68** (66) | **65** (63) | **56** (45) |

*(அடைப்புக் குறியுள் உள்ளது முதல் சுற்று மதிப்பெண்)*

அறிவாற்றல், பிரச்சனைகளைத் துணிவோடு சந்திப்பது, நிர்வாகத் திறமை, துடிப்பாகவும் விரைவாகவும் செயல்படுவது, ஊடகங்களைத் தயங்காமல் எதிர்கொள்வது, வெகுஜனங்களோடு நல்லுறவு பாராட்டுவது, சமூக அக்கறை ஆகிய ஏழு அம்சங்களிலும் முதல் சுற்றை விட அதிக மதிப்பெண்களுடன் இரண்டாம் சுற்றிலும் தொடர்ந்து டிடிவி. தினகரன் முதலிடம் வகிக்கிறார். அறிவாற்றல், துடிப்பான செயல்பாடு ஆகிய இரண்டைத் தவிர பிற பண்புநலன்களில் கடந்த சுற்றைவிட சற்று அதிக மதிப்பெண்கள் பெறுகிறார் மருது கணேஷ். மதுசூதனனும் துணிச்சல் மற்றும் துடிப்பான செயல்பாடு தவிர பிறவற்றில் சிறிது அதிகமாக மதிப்பெண்கள் பெறுகிறார். களத்தில் நிற்கும் பிற வேட்பாளர்களைப் பொருத்த அளவில் இரண்டு சுற்றுகளுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் எதுவுமில்லை.

*(3) பணம் குறித்த மன ஊசலாட்டம்:*

*“வாக்குக்குப் பணம்”* மற்றும் *“பணத்துக்கு வாக்கு”* என்ற இரட்டைச் செயல்பாடுகள் குறித்த ராதாகிருஷ்ணன் நகர் வாக்காளரின் மனநிலைகள் நுணுக்கமான ஆய்வுக்குரியன.

(அ) தொகுதி வாக்காளரில் *ஏறத்தாழ அனைவருமே* தமக்குக் கட்சிகள் / வேட்பாளர்கள் வாக்களிக்கக் கோரி அதற்கு ஈடாகப் பணம் / பொருள் தர முன்வரும்போது அதற்கு மறுப்புத் தெரிவிக்காமல் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இது தொடர்பாகத் தேர்தல் ஆணையம் எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பெரும்பாலான வாக்காளர்கள் ரசிக்கவில்லை.

(ஆ) வாக்களிப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில் வாக்காளருக்கு வேட்பாளர்கள் பணம் விநியோகம் செய்வதற்கும், பணம் வாங்கிய வேட்பாளருக்கு வாக்களிக்க வாக்காளர்கள் முடிவுசெய்வதற்கும் நேரடியான *காரண-காரிய உறவு* வெளிப்படவில்லை. இதுவரை எந்த ஆய்விலும் இந்த உறவு நிறுவப்படவில்லை.

(இ) ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களிடமிருந்து பணம் பெற்றுள்ள சூழ்நிலையில், அதிலும் குறிப்பாக, வெவ்வேறு நபர்களிடமிருந்து வெவ்வேறு அளவுகளில் பணம் பெற்றுள்ள சூழ்நிலையில், வாக்காளர்களின் மனநிலையில் குறிப்பிடத்தக்க ஊசலாட்டத்தையும் மன உளைச்சலையும்கூட காணமுடிகிறது.

(ஈ) ரா.கி.நகரில் ஏற்கெனவே ஏப்ரலில் குறிப்பிட்ட வேட்பாளர்களிடமிருந்து பணம் பெற்றவர்கள் தற்போது வேறு வேறு வேட்பாளர்களிடமிருந்து மீண்டும் பணம் பெற்றுள்ளார்கள்.

இவர்களில் கணிசமான அளவினர் யாருக்கு வாக்களிப்பது என்பதில் மிகுந்த தடுமாற்றத்தில் உள்ளனர்.

(உ) வாக்காளரின் தற்போதைய மனநிலை டிடிவி. தினகரனுக்கு ஆதரவான நிலைப்பாடாக மாறும் சாத்தியம் அதிகம் தென்படுகிறது.

***(4) இன்று வாக்களித்தால்...:***

தொகுதியின் தற்போதைய கள / கலக நிலவரப் பின்னணியில், பரவலாகப் பணம் விநியோகிக்கப்பட்டுள்ள எதார்த்தச் சூழ்நிலையில், இன்று வாக்களிப்பதாக இருந்தால், கடந்த சுற்றைப் போலவே இந்தச் சுற்றிலும் டிடிவி. தினகரன் முன்னிலை வகிக்கிறார்.

| | சுற்று 2 (டிச. 13-17) | சுற்று 1 (டிச. 5-12) |
|---|---|---|
| டிடிவி. தினகரன் | **37.4** | 35.5 |
| மருது கணேஷ் | **24.3** | 28.5 |
| மதுசூதனன் | **22.1** | 21.3 |
| கலைக்கோட்டுதயம் | **4.8** | 4.6 |
| கரு. நாகராஜன் | **0.8** | 1.5 |
| மற்ற வேட்பாளர்கள் | **0.5** | 0.5 |
| நோட்டா | **3.0** | 4.2 |
| முடிவுசெய்யவில்லை | **7.1** | 3.9 |

***முதல் சுற்றோடு ஒப்பிடுகையில்:*** (அ) இரண்டாம் சுற்றில் டிடிவி.தினகரனுக்கு ஏறத்தாழ இரண்டு விழுக்காடுப் புள்ளிகளும் மதுசூதனனுக்குச் சிறிதளவும் (0.8) அதிகரித்துள்ள வேளையில், மருதுகணேஷ் நான்கு புள்ளிகளுக்குமேல் சரிவைச் சந்தித்துள்ளார். (ஆ) இன்னும் முடிவு செய்யாதவர்கள் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது. இரண்டாம் இடத்தைத் தீர்மானிப்பதில் இந்த வாக்குகள் முக்கிய பங்காற்றும்.

***புறக் காரணிகள்:*** ஆய்வு நடந்த காலகட்டத்தில், டிடிவி. தினகரனுக்கு ஆதரவான எழுச்சி களச் சூழலில் புலப்படுவதைக் காணமுடிகிறது. எனினும், இன்றும் நாளையும் நடக்கும் *வெளிப்படையான* பிரச்சாரங்களைத் தவிர்த்து, தேர்தல் முடிவில் *தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்தும் சட்ட/அற/தேர்தல் நெறிகளுக்கு அப்பாற்பட்ட புறக் காரணிகளாக* (supervening factors) கீழ்வரும் இரண்டைச் சுட்டிக்காட்டலாம். (அ) கடைசி 48 மணி நேரத்தில் நடைபெறும் ***கமுக்கச்*** செயல்பாடுகள்; (ஆ) வாக்குப்பதிவின் அளவும் விதமும். குறிப்பாக, வாக்குப் பதிவு நாளன்று **கடைசி சில மணிகளில்** பதிவாகும் *"இயல்புமீறிய"* வாக்குகள்.

***(5) தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு:***

தேர்தல் ஆணையம் நடுநிலையோடு செயல்படவில்லை என்பதே தொகுதியில் நான்கில் மூவருடைய கருத்து. பத்தில் ஒருவர்கூட தேர்தல் ஆணையத்தைப் பாராட்டாதது ஆணையத்தின் கவனத்திற்குரியது. தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு மோசம் - 75.4, சிறப்பு - 8.3, சொல்லிக் கொள்ளும்படி எதுவுமில்லை - 16.3.

---

சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழு, மக்கள் ஆய்வு
18 டிசம்பர் 2017

---

*கவனத்திற்கு:* (1) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (2) கேள்விக்கான பதில்களில் முக்கியமானவை மட்டும் பட்டியலிடப்பட்டுள்ளதால், சதவீதங்களின் கூட்டுத்தொகை 100-ஐ விடக் குறைவாக இருக்கலாம்.

# நீரோட்டம்:

## அரசியல் பண்பாடும் பண்பாட்டு அரசியலும்

### *கள ஆய்வுகளில் 21-ஆம் நூற்றாண்டுத் தமிழகம்*

*வெறுமனே தேர்தலை முன்வைத்த கணிப்புகளுக்கு மாறாக, தேர்தல் பின்புலத்தில் மக்களை மையப்படுத்திய, நேர்மையான, நடுநிலையான, நம்பகமான, வெளிப்படையான, துணிச்சலான களஆய்வுகளாக இருப்பதால், வரலாறு வரைவுக்கான மூல ஆவணங்களில் நீரோட்டம் என்ற இந்த நூலும் ஒன்றாகத் திகழ்கிறது.*

*இந்த நூற்றாண்டில் இதுவரை தமிழகம் / தமிழர்கள் பயின்று வந்துள்ள பாதைகள், பார்வைகளின் திசைகள், உந்து விசைகள், எதிர்கொண்டுள்ள சவால்கள் / சவடால்கள், அவற்றின் பின் உறைந்துள்ள / சிதைந்துள்ள வரலாறுகள், பண்பாட்டு ஆணிவேர்கள் / எச்சங்கள், அரசியல் கணக்குகள் / பிணக்குகள், தேர்தல் சூத்திரங்கள் / சாத்திரங்கள், ஊடகச் சித்து விளையாட்டுக்கள்... என நிகழ்கால வரலாறு வரைவியலின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கே திரட்டித் தருகிறது.*

*ஆய்வாளர்கள், அரசியல் நோக்கர்கள், அரசியல்வாதிகள் தமிழகப் பண்பாடு-அரசியல் பரிணாமங்களை இன்னும் சற்று நெருங்கிச் சென்று புரிந்துகொள்ள மேலாய்வு செய்வதற்கான தரவுகளின் பெட்டகமாக விளங்குகிறது.*

*மக்கள் பெயரைச் சொல்லி / மக்களை அணுகி மேற்கொள்ளப்படும் ஆய்வு எத்தகையதாக இருந்தாலும் அந்த ஆய்வின் முடிவுகளை அறிந்து கொள்ளும் உரிமை ஆய்வுசெய்யப் பயன்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்டு. அவ்வாறே, வெகுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க விதத்தில் ஆய்வுகள் குறித்த விவரங்களை வெளிப்படையாக வைத்திருக்க வேண்டிய கடமை ஆய்வாளருக்கு உண்டு. இத்தகைய கருத்தியல் பின்னணியில், "மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கைவாக்கை மெய்ப்பிக்கும் மற்றொரு முயற்சி நீரோட்டம்.*

*ஆசிரியர்:* ***ச. ராஜநாயகம்*** / *வெளியீடு:* ***மக்கள் ஆய்வகம்*** / ISBN: 978-81-910217-9-0

---

## POPULAR CINEMA AND POLITICS IN SOUTH INDIA

### REIMAGINING MGR AND RAJINIKANTH

This work breaks new ground in the understanding of South Indian cinema and politics. Through incisive analysis and original concepts it illustrates the private, public and cinematic personas of MGR and Rajinikanth. It challenges the popular and scholarly myths surrounding them and shows the constant negotiation of their on-screen and off-screen identities. The book revisits the entire political history of post-Independent Tamil Nadu through its cinema, and presents a refreshing psycho-political and cultural map of contemporary South India. Replete with illustrative diagrams and graphs that lay bare the tropes of South Indian films, this work will be a major intervention in the understanding of Indian cinema.

This absorbing volume will be an important read for scholars, teachers and students of film studies, culture and media studies, and politics, especially those interested in South India.

***Author:*** **S. Rajanayagam** / ***Publisher:*** **Routledge** / ***ISBN:*** **978-1-13-882203-0**
*Visit:* http://www.routledge.com/books/details/9781138822030

---